Registered as a Newspaper

காலத்திற்குக் காலம் மாறிவரும் கலைரசனைக்கு ஏற்ப உங்கள் மங்களகர வைபவங்களை வீடியோ படமாக்கிக் கொள்ள இன்றே நாடுங்கள்
குலம்
வீடியோ ஹோம்
இல. 1, நவீன சந்தை, சாவகச்சேரி.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-50

KULAM
Video Home
For Quality Video Cassettes in
Tamil, Hindi, English
No. 1, New Market
CHAVAKACHCHERI

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு பங்குனி மீ 02 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 றஜபு பிறை 25 (15 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:28

★ தடைப்பட்ட ஜீ. சி. ஈ பரீட்சை:

# மாற்று ஏற்பாட்டுக்கு ஏகோபித்த எதிர்ப்பு!

## ஜூன் மாதத்திலேனும் விசேட பரீட்சை நடத்த அதிபர்கள் கல்வி அமைச்சுக்கு மகஜர்

— அலுவலகச் செய்தியாளர்: சுரேஷ்குமார் —

யாழ்ப்பாணம் மார்ச் 15

யாழ். மாவட்டத்தில் 1987 டிசம்பரில் நடைபெறாது தடைப்பட்ட ஜீ. சி. ஈ சாதாரண தரப் பரீட்சைக்குப் பதிலாக, மாவட்ட மட்டத்தில் பரீட்சை நடத்தும் அரசாங்கத்தின் மாற்று ஏற்பாட்டுக்கு, மாவட்டப் பாடசாலை அதிபர்கள் ஏகோபித்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

விசேட பரீட்சை நடத்துவதற்குப் பரீட்சைத் திணைக்களத்திற்கு கால அவகாசம் போதாது என்ற காரணத்தைக் காட்டி, பரீட்சையை டிசம்பரில் வைக்கவேண்டாம் என்றும்—

ஜூன் மாதத்திலாவது விசேட பரீட்சையை நடத்தவேண்டும் என்றும் கோரி— அதிபர்கள் இந்திய அமைதிப் படையின் நகரக் கொமாண்டர் ஊடாகக் கல்வி அமைச்சுக்கு அவசர மகஜர் ஒன்றை நேற்று அனுப்பிவைத்தனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்று, யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூரினால் கூட்டப்பட்ட மாநாடு ஒன்றில் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் அதிபர்களும் கலந்து கொண்டனர்.

ஏப்ரலில் விசேட ஜீ. சி. ஈ பரீட்சை எதுவும் நடத்தப்படமாட்டாது என்றும்—

மாவட்ட மட்டத்தில் பரீட்சை நடத்தி மாணவரை உயர்தர வகுப்புக்கு ஏற்றம் செய்யுமாறு உத்தரவிடப்பட்டதாகவும் — மாநாட்டில் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

அரசின் மாற்றுத்திட்டத்துக்கு பாடசாலை அதிபர்கள் ஏகோபித்த ரீதியில் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அறிவித்தனர்

மாற்றுப் பரீட்சைத் திட்டத்தினால் தனிப்பட்ட பரீட்சாத்திகளும் உயர்தர வகுப்பில் பயில விரும்பாது தொழில் தேட விரும்பும் மாணவரும் பாதிக்கப் படுவார்கள் என அதிபர்கள் சுட்டிக்காட்டினர்.

இவற்றை முன்வைத்து பரீட்சைத் திணைக்களம் ஜூன் மாதத்திலேனும் விசேட பரீட்சை நடத்த வேண்டும் என அரசாங்கத்தைக் கோருவது எனவும்—

அதற்கான மகஜரை இந்திய அமைதிப்படை அதிகாரி ஊடாக கல்வி அமைச்சுக்கு அனுப்புவது எனவும் — அதிபர்கள் முடிவு செய்தனர்.

அதன் பிரகாரம் நேற்றைய தினமே மகஜர் அமைதிப்படையின் நகரப் பொறுப்பதிகாரி அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது.

பிரஸ்தாப மகஜரில் அடங்கியுள்ள விடயங்களாவன:-

★ யாழ். மாவட்டப் பாடசாலை அதிபர்கள் யாவரும் கல்வி அமைச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கால அவகாசம் போதாது

### கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச்15

1987 டிசம்பரில் நடைபெறாது தடைப்பட்ட ஜீ சி ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குப் பதிலாக போதிய கால அவகாசம் இன்மையால் ஏப்ரலில் பரீட்சை திணைக்களம் சாதாரணப் பரீட்சை எதையும் நடத்தமாட்டாது

இப்படி வடபிராந்தியக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில் கல்வி அதிகாரிகள், கொத்தணி அதிபர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர் மத்தியிலேயே பணிப்பாளர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

தடைப்பட்ட பரீட்சைக்குப் பதிலாக விசேட பரீட்சையை நடத்தும்படி தம்மிடம் பல மகஜர்களும் வற்புறுத்தல்களும் வந்துசேர்ந்

(4–ஆம் பக்கம் பார்க்க)

## பயிற்சியை முடித்த ஆசிரியருக்கு விரைவில் இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச்15

கடந்த வருடம் பயிற்சியை முடித்து பாடசாலைக்கு கடமைக்குச் சென்ற பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கு இறுதிப் பரீட்சை விரைவில் நடத்தப்படும்.

இவ்வாறு கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. எல். விஜேமானே தம்மைச் சந்தித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் - திருமலை பஸ் சேவை இல்லை

யாழ்ப்பாணம், மார்ச்15

பதற்ற நிலை தணிந்த பின்னரே யாழ்ப்பாணம்-திருகோணமலை பஸ் சேவைகள் நடத்தப்படும்.

இப்படி வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மைக்காலங்களில் யாழ்ப்பாணம் - திருகோணமலை வீதியில் பல அசம்பாவிதங்கள் ஏற்பட்டதே இதற்குக் காரணமாகும்.

சுமுக நிலை ஏற்பட்டதன் பின்னர் யாழ்ப்பாணம்- திருகோணமலை, திருகோணமலை - யாழ்ப்பாணம் பஸ் சேவைகள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தனியார் மூலம் நடத்தப்பட்டு வந்த திருகோணமலை- யாழ்ப்பாணம் பஸ் சேவையும் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது.

[ஒ-10]

முச்சந்தி முரளி



ஏதோ...! உந்த நகைகள் விஷயத்திலை அவை கைக்கு வந்து சேர்ந்த பிறகு தான் உண்மை பாருங்கோ......

## இன்று இயங்காது

யாழ்ப்பாணம், மார்ச்15

யாழ் மாநகரசபையின் சில அலுவலகப் பிரிவுகள் இன்று இயங்கமாட்டா.

செவ்வாய், வியாழன் ஆகியநாட்களில் மாநகர சபையின் அலுவலகப் பிரிவுகள் இயங்கமாட்டாதென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே [ஒ-10]

## சுபநேரம்

15-03-1988
பங்குனி 2
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10-51 முதல் 12-21வரை
ராகுகாலம்:
3-21முதல் 4-51 வரை.
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பிரதோஷ விரதம்

## ★ 125 ஸி ஸி ரக மோட்டார் சைக்கிளும் ஓடுவதற்கு அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ் குடாநாட்டில் 125 ஸிஸி ரக மோட்டார் சைக்கிள்களையும் ஓடுவதற்கு இந்திய அமைதிப்படையினரால் தற்போது அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

எனினும் அருகிலுள்ள அமைதிப் படையின் பொதுநலத்துறை அதிகாரியின் அனுமதி பெற்றே இந்த ரக மோட்டார் சைக்கிள்களை உபயோகிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது

இதுகாலவரை ஸி 50, ஸி 70, ஸி 90 ரக மோட்டார் சைக்கிள்களுக்கே அனுமதி வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்க . (ல)

உத்தேச வேலை நிறுத்தம்

## தமிழ் நாட்டில் 13,000 பேர் கைது கண்ட இடத்தில் சுடவும் உத்தரவு

சென்னை, மார்ச் 15

இன்று நடைபெறும் பொது வேலை நிறுத்தத்தை ஒட்டி, தமிழ் நாட்டில் சுமார் 13 ஆயிரம் பேரைப் பொலீஸார் கைதுசெய்து காவலில் வைத்தனர்.

வன்செயல்களைத் தடுக்கும் நடவடிக்கையாக இவர்கள் கைதுசெய்யப்பட்டவர் என்று பொலீஸ் கமிஷனர் திரு. தேவாரம் தெரிவித்தார்.

குழப்பம் செய்பவர்களைக் கண்டால், கண்ட இடத்தில் சுடும் உத்தரவு தமிழ்நாடு முழுவதும் நேற்றில் இருந்து அமுலுக்குவந்தது (அ-எ)

(முன்னர் வந்த செய்தி மூலரும் பக்கத்தில்)

மக்கள் வங்கியில் அடகு வைத்த

# நகைகளை மீளளிக்கும் நடவடிக்கை விரைவில்

### அதிகாரிகள் குழு இன்று கொழும்பு செல்லும்

— அலுவலகச் செய்தியாளர்: ஜெயபூரணச்சந்திரன் —

யாழ்ப்பாணம், மார்ச் 15

மக்கள் வங்கியில் அடகு வைத்த நகைகளை மீளளிக்கும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்

மக்கள் வங்கி யாழ் பிரதேச முகாமையாளர் திரு. எம். கணேசசுந்தரம் மேற்கண்டவாறு நம்பிக்கை தெரிவித்தார்

1987 ஆம் ஆண்டு கொடுப்பதற்காக கொண்டுவரப்பட்டு கொடுபடாது எஞ்சி உள்ள நகைகளும் –

மக்கள் வங்கி பிரதான வீதிக் கிளை, ஸ்ரான்லி வீதிக் கிளை, நெல்லியடிக் கிளை, பருத்தித்துறைக் கிளை ஆகியவற்றில் அடகு வைத்து மீளப் பெறுவதற்குரிய பணத்தைச் செலுத்தியோருக்கான நகைகளே தற்போது வழங்கப்பட உள்ள நகைகள் ஆகும்

நகைகள் மீளளிக்கப்படும் இடம், நேரம், திகதி போன்ற விவரங்கள் உரியவர்களுக்கு கடிதமூலம் அறிவிக்கப்படும் என்று முகாமையாளர் தெரிவித்தார்

இந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்த உயர் மட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குழு ஒன்று இன்று கொழும்பு செல்ல இருக்கிறது மீளளிப்பதற்கு தயார்படுத்தும் நகைகள் பலாலியூடாக கோட்டை முகாமுக்கு கொண்டுவரப்படும்.

(இ-5)

## சிங்களவர் பன்னிருவர் கொலை

கொழும்பு, மார்ச் 15

திருகோணமலையில் இருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சல்மெட்டியாவ என்னுமிடத்தில் 12 சிங்களவர்கள் கொலையுண்டனர்.

நேற்று மாலை இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் இவர்கள் சுடப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றதாக தெரிய வருகின்றது

இத்தாக்குதலில் காயமடைந்த ஐந்து சிங்களவர்கள் ஆஸ்பத்திரிக்கு விரைந்து அனுப்பப்பட்டனர்.

இதன் காரணமாக திருமலையில் பதற்றம் நிலவியதாக அறிவிக்கப்பட்டது. (அ-எ)

# கொழும்பில் இரவிலும் தீவிர தேடுதல் வேட்டை!

— கொழும்பு அலுவலகச் செய்தியாளர் —

கொழும்பு, மார்ச் 15

கடந்த சில நாட்களாக கொழும்பு நகரில் இரவுவேளைகளிலும்தேடுதல் வேட்டை முடுக்கி விடப்பட்டுள்ளது

இந்த தேடுதல் வேட்டையால் கொழும்பு நகரில் அவசர வேலைகள் காரணமாக வந்து தங்கியுள்ள தமிழ் இளைஞர்கள் மட்டுமன்றி சிங்கள இளைஞர்களும் கைதுசெய்யப் படுகிறார்கள்

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி மற்றும் தமிழர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளிலேயே இரவு 10மணிக்குப் பின் வீதிகளில் நடமாடும் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

இவர்கள் விசாரிக்கப்பட்டபின் அவர்களின் அடையாளத்தையும் விவரங்களையும் யாராவது உறுதிசெய்யும் பட்சத்தில் அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள் (ஒ-3)

## பூரி ஜெனீவாவில் கடமை

கொழும்பு, மார்ச் 15

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் அரசியல் செயலாளர் திரு. ஹார்டிப் சிங் பூரி, ஜெனீவாவில் உள்ள ஐ. நா. பொருளாதார சபையில் இந்தியப் பிரதிநிதியாகக் கடமையாற்றுவார்.

1985 முதல் திரு பூரி கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் அரசியல் செயலாளராகப் பணியாற்றி வந்தார்.

(ஒ எ)

## 'சென்றி'கள் அகற்றப்படுகின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ் குடாநாட்டில் அமைதிப் படையினரால் அமைக்கப்பட்டிருந்த 'சென்றி' நிலைகள் தொடர்ந்தும் அகற்றப்பட்டு வருகின்றன

(ஒ-10)

# மட்டுநகரில் நடக்கஇருந்த பேரணிக்குத் தடை விதிப்பு!

கொழும்பு, மார்ச் 15

மட்டக்களப்பில் நேற்று நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணிகள் இந்திய அமைதிப் படையினரால் தடைசெய்யப்பட்டன.

இருபத்து மூன்று தினங்களாக உண்ணாவிரதமிருந்து வரும் அன்னையர் முன்னணி உறுப்பினரான திருமதி அன்னம்மாள் டேவிட்டுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் இப்பேரணியை நேற்று நடத்த ஒழுங்கு செய்திருந்தன

நான்கு அல்லது ஐந்து பேர்களுக்கு மேல் ஓர் இடத்தில் கூட்டம் கூடக்கூடாது என்று அமைதிப் படையினர் உத்தரவிட்டவர்.

அதைத் தொடர்ந்து பேரணி நடைபெறவில்லை என்று ஏஜன்ஸிச் செய்திகள்தெரிவித்தன.

சுமார் பத்து நாட்களுக்குமுன்னரும் ஈரோஸ் இயக்கத்தினர் நடத்த இருந்த பேரணிக்கு இந்திய அமைதிப் படையினர் தடைவிதித்திருந்தனர்.

ஐந்து பேருக்கு மேல் ஓர் இடத்தில் கூடக் கூடாது என்று அமைதிப் படை அப்போதும் உத்தரவிட்டிருந்தது. (ஒ-எ)

## மண்டபத்தில் ஒரு மர்மக் கப்பல்!

### ஆயுதங்கள் கண்டுபிடிப்பு

சென்னை, மார்ச் 15

மண்டபத்திற்கு அருகில் ஆயுதங்களை விசைப் படகுகளில் இறக்கிக் கொண்டிருந்த கப்பல் ஒன்றை இந்தியக் கடற்படை கைப்பற்றியதாக அறிவிக்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான குண்டுகள் உட்பட மற்றும் ஆயுதங்கள் இந்தியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இலங்கை இராணுவச் சீருடைகள் சிலவும் இந்தியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

விசைப்படகுகளில் இருந்தவர்கள் தப்பிச் சென்று விட்டனராம்.

கப்பல் எந்த நாட்டைச் சேர்ந்தது என்பது பற்றிய விவரம் வெளியிடப் படவில்லை (அ-எ)

## விஜேவீர கைதாகலாம்

கொழும்பு, மார்ச் 15

ஜே. வி. பி தலைவர் ரோஹண விஜேவீர எந்த நேரத்திலும் கைதாகலாம் என்று கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

கொழும்பு வட்டாரங்களின்படி, விஜேகுமாரணதுங்காவின் கொலையைத் தொடர்ந்து ஜே. வி. பி. தலைமைபீடத்தில் கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதாம்.

விஜேகுமாரணதுங்க கொலைக்கு

(4-ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தெல்லிப்பழை கிழக்கு துர்க்கா தேவி ஆலயத்திற்கு அண்மையாக புகையிரத வீதி ஓரமாகப் புதிய சகல வசதிகளும் உள்ள 16½ பரப்பு வீடு வளவு உடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஹோட்டல் ருெலெக்ஸ் 34, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1625)

Radio TV Air Conditioning Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டார் மெச்சானிசம், வைண்டிங், Spoken English, Typing சிறந்த செய்முறைப் பயிற்சியுடன் ஆரம்பமாகின்றன. அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
Vispa Engineering Aid Hall 328, Navalar Road, Jaffna (1840)

சொனி 20'' கலர் ரெலிவிசன் (2010 20 20, 2032 2060, 2072) Gold-star 2010 சன்யோ 14'' 20'' கலர் ரெலிவிசன், நாஷனல் 211, 291 ஆகிய ரேடியோ சீரியூப் மற்றைய சகல உதிரிப்பாகங்களும் உடன் விற்பனைக்குண்டு. Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். (1925)

நாவற்குழி சேரதிவு வீதியில் நாவற்குழிச் சந்தியில் இருந்து அரை மைல் (½ மைல்) தொலைவில் பிரதான வீதி (சேரதிவு வீதி) ஓரமாக ஒன்பது பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- திரு. கா அன்னலிங்கம், 'Brindavanam' நாவற்குழி, கைதடி. (2041)

பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிரதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (1950)

வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட 2×5 அடி இரட்டைக் கதவு குளிர் சாதனப் பெட்டி உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ஜவ்ஹ எலெக்ரோ — பிளேஸ், 7 கஸ்தூரியார் லேன் கன்னாதிட்டி சிவன் கோவிலுக்குக் கிட்டிய தூரம் (2045)

### தேவை

1 யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் பிரபலிக்கமான வீதி அருகாமையில் ஒரு வீடு அல்லது வீடு கட்டக் கூடிய காணி
2 நல்ல நிலையிலுள்ள ''Vespa'' ஸ்கூட்டர் அல்லது C 50. விபரம்:- J. P. T. 3 நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். (1930)

### சேவை

#### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும். Fudo Enterprises. 39/17. Power House Road, 3rd Lane, Jaffna (1803)

#### ருேனியோ

கிளின்-கட் உங்களை என்றும் வரவேற்கின்றது ருேனியோ வேலைகளுக்கு என்றும் நீங்கள் நாடும் இடம்: கிளின்-கட் இல 239 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

#### புத்தகம்

English Language easy Exercises and New Model Question Papers for G.C.E. (O/L) Examination paper I & II (with solution) Based on the Past Examination Paper. By Jasephin G Varnam price: 15/ available at Poobalasingham Book Depot Jaffna. (1602)

### வாடகைக்கு

ஆண்டு 7, 8, 9, 10 இல் கல்வி பயிலும் மாணவிகளுக்கான உணவுடன தங்குமிட வசதி நல்லூர் கோவிலுக்கு அண்மையில் உண்டு தொடர்பு:- C/o.90, உதயன் 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (1945)

### காணவில்லை

நல்லையா பாலமனோகரன் என்பவருடைய அடையாள அட்டை No. 633602859 V யாழ் கன்னாதிட்டிக்கும் நாவலர் ரோட்டுக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (1941)

# Paper Classes

## 88 AUG.

இந்துநாகரிகம் — அருள்நங்கை
பொருளியல் — குமாரவேல்
ஆரம்பம்: 16 - 3 - 88
புதன் பி.ப. 3.00

அளவையியலும் விஞ்ஞானமுறையும் - கேசவன்
ஆரம்பம்: 18 - 3 - 88
வெள்ளி பி.ப. 2.30

நிர்வாகி
செமின்ஸ் இன்ஸ்ரிரியூட்
நெல்லியடி.

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



கந்தையா கனகம்மா

கொட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது நல்லூரில் வசித்தவருமாகிய கந்தையா கனகம்மா 14-02 88 இல் அமரரானார். இன்று (15-03-88) காலை பத்து மணியளவில நடைபெறும் சபிண்டீகரணக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

ந சின்னத்துரை
142, கோவில் வீதி,
நல்லூர். (1908)

## அரை ஆண்டு நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்

தோற்றம்: 28-06-1921



மறைவு: 15 10-1987

பூதர் கனகு (சினி)

எங்கள் குடும்ப விளக்காய் ஒளி வீசி நின்று எங்களைக் காலமெல்லாம் கண்ணின் இமை போல் காத்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து அரை ஆண்டென்ன ஆறுயிரம் ஆண்டானாலும் நீங்கள் காட்டிய அன்பும், பண்பும், பாசமும் எங்கள் இதயங்களை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்.
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி [1935]

## 31-ஆம் நாள் நினைவுதினம்

(15-3-1988)



இராயப்பு பாக்கியநாதர்

ஆண்டவன் படைப்பு: 30-10-1944
விண்ணுலகில்: 14-02-1988

ஒளி படைத்த கண்ணும் உறுதி கொண்ட நெஞ்சமும் அன்பு உள்ளமும் அமைதியும் பண்பும் தெய்வ பக்தியும் நேர்மையும் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே!

கடிதென வந்த காலன் உன்னைக் கவர்ந்து கொண்டு சென்றானே! கலங்குகின்றோம். எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டுச்சென்ற தங்கள் அன்பு முகம் எம் நெஞ்சை விட்டு என்றென்றும் அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் வாடும்.
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

3ஆம் குறுக்குத் தெரு,
பாஷையூர்,
யாழ்ப்பாணம் (1942)

## பயிற்சி வகுப்புகள்

* COMPUTER PROGRAMMING & DATA PROCESSING IN BASIC LANGUAGE

காலம்: 4 மாதம் கட்டணம்: 1000/-

★ COMPUTER PROGRAMMING & STRUCTURE FLOWCHART OR COBOL LANGUAGE.

காலம்: 3 மாதம் கட்டணம்: 1000/-

உலக பிரசித்தி பெற்ற Radio Shack Computer ல் கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும். (கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்)

NOTE:-
வேறு நிறுவனத்தில் Basic படித்தவர்களும் அனுமதிக்கப்படுவர்.

ஆரம்பம்:-
19- 3- 88 11.00 A.M.

Jaffna Technical Institute
52/1 ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

காங்கேசன்துறை சீமெந்து தொகையாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொகையான பைக்கெற்றுகளை கொள்முதல் செய்பவர்களுக்கு இலவசமாக ரான்ஸ்போட் செய்துதரப்படும்.

நிப்பொன்
ஹாட்வெயர்

2G, ஸ்ரான்லி வீதி,
கஸ்தூரியார் — ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

## 147 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திக் கிரியையும் (வீட்டுக்கிருத்தியம்)



திரு. கணபதிப்பிள்ளை உமைநேசன்
(விஞ்ஞானப் பட்டதாரி)

தோற்றம்: 04. 01. 59
மறைவு: 21. 10. 87

திதி -16 03. 88 புதன்கிழமை

மேற்குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் நடைபெறவிருக்கும் எமது மகனின் ஆத்ம சாந்திக்கிரியைகளில் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உமை நேசா உமக்கு எமது கண்ணீர் அஞ்சலி!
நின் பிரிவு தாங்காது ஆறாத்துயரில்
மீளாதிருக்கும்

| | |
|---|---|
| தந்தை:- | திரு. ப. கணபதிப்பிள்ளை, |
| தாய்;- | திருமதி. க. கனகாம்பிகை, |
| அக்கா:- | ப. தில்லைநாயகி, |
| அண்ணா:- | திரு. க. குகநேசன், |
| தம்பி;- | திரு. க. தவநேசன், |
| மைத்துனர்; | பொ பரமநாதன், |
| மருமக்கள்; | ப. மணிவண்ணன், ப. யாழினி, ப. யாதவன். ப. கல்யாணி. |

17 [illegible] வடலி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (1605)

## 6 ஆம் கிழமை அறிவித்தல்


இளவாலை புனித அன்னம்மாள் ஆலய புனித வியாகுலமாதா வணக்க வழிபாடுகள் 20-03-88 — 25-03-88 ஆகிய நாட்களில் நடைபெறும். கடைகள் போடுவதோ அன்ன தானம் வழங்குவதோ இங்கு கண்டிப்பாக விலக்கப்பட்டுள்ளது என்பதைப் பக்தர்களுக்கு அறிவிக்கிறோம். ஏழைகளுக்கு நம் அகதிகளுக்கும் உதவ முன்வருவோர் பங்குத்தந்தையுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

பங்குத்தந்தை
இளவாலை.
(1941)

## விநியோகம்

எல்லா இன வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் - புறொயிலர், கறுப்பு, பிறவுண் சேவல் குஞ்சுகளும் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி நாட்களில் விநியோகிக்கப்படும் முன் கூட்டி பணத்துடன் பதிவு செய்யும் இடங்கள்:-
R. S. K. Farm - முருகபதி, உரும்பிராய்.
குபேரன் ஸ்ரோர்ஸ் - கொக்குவில் சந்தி, கொக்குவில்.
Farm House - கோட்ஸ் ரோட், மல்லாகம்.
இணுவில வீடியோ சென்ரர் - இணுவில்.
Red Rose Farm - தெனியெம்பை, வல்வெட்டித்துறை
கோகிலா கூல்பார் - கொடிகாமம். (1936)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 03- 05- 1887
மறைவு: 14- 02- 1988

திருவாட்டி செல்லம்மா அவர்கள்
ஸ்ரீ விஸ்வலிங்கப் பிள்ளையார் கோயிலடி முருகமூர்த்தி வீதி, வண். வடமேற்கு வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

அன்பின் தெய்வமாய்அறிவுரைகள் தந்து எம்மை வாழ வைத்த எமது அன்பு அன்னையின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆச்சியின் அந்தியேட்டிக் கிரியைகள் 13-03-88 ஞாயிற்றுக்கிழமை கீரிமலையிலும், அன்னாரின் வீட்டுக் கிரியைகள் சபிண்டீகரணக் கிரியைகள் என்பன 15-03-88 செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்கு அன்னாரது இல்லத்திலும் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத் தருகின்றோம்.
க. சிவபாக்கியம், ந. வேதவல்லி, பிள்ளைகள்,
ந. நடராசா, மருமகன்.
(2040)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 28 09. 1951
உதிர்வு: 14. 02. 1988

அமரர் கே. ஆர். மகேந்திரராசா

(மட்டக்களப்பு அமிர்தகழியைச் சேர்ந்தவரும் இலங்கை மின்சாரசபை யாழ் ஆக்கப் பகுதி ஊழியர்) அகால மரணமடைந்த எங்கள் அன்புக்குரியவரும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உடையவருமாகிய அன்னாரின் இறுதிக் கிரியைகளிலும், கிளிநொச்சியிலிருந்து அவரது பூதவுடலை எடுத்து வந்த மின்சாரசபை ஊழியர்களுக்கும் மற்றும் பல வகைகளிலும் உதவி செய்த சகலருக்கும் மற்றும் அனுதாபச் செய்தி அனுப்பிய வர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள் உறவினர்கள்,
இ. மி. ச. ஊழியர்கள்.
[2047]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

பணக்காரன் ஆவதற்குப் பணத்தைக் குவிக்க வேண்டும் என்பதில்லை. நம்முடைய தேவைகளைக் குறைத்துக் கொண்டாலே போதும்.

—ஸ்பானிஷ் பழமொழி


# உதயன்

உண்மை - விருந்தாமை - நடுநிலைமை

இல:-292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24806, 22073
யாழ்ப்பாணம்.
15 03 1988 ந.பெ.இல: 23


## இம்மியும் இல்லையே!

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வருட இறுதியில் நடவாது தடைப்பட்ட ஜீ. சி. ஈ. சாதாரணதர பரீட்சைக்குப் பதிலாகப் பரீட்சைத் திணைக்களம் விசேட பரீட்சை எதனையும் நடத்த மாட்டாது.

இந்தத் தவணை இறுதியில் மாவட்ட மட்டத்தில் ஒரு பரீட்சையை நடத்தி, அதன் அடிப்படையில் மாணவர்களை உயர்தர வகுப்புக்கு ஏற்றம் செய்யத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மாணவர்கள் இவ்வருட இறுதியில் நடக்கும் சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி அடைய வேண்டும். அப்போது தான் அவர்கள் உயர்தர வகுப்பில் தொடர்ந்து படிக்கவும், உயர்தர பரீட்சைக்குத் தோற்றவும் தகுதி பெற்றவர்களாக முடியும்.

1988 டிசம்பர் சாதாரணதர பரீட்சையில் தகுதி பெறுதவர்கள் தொடர்ந்தும் உயர்தர வகுப்பின் இரண்டாம் வருடத்தில் பயில அனுமதிக்கப்படுவார்களா? மீண்டும் 1989 ஜீ. சி. ஈ. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றி உயர்தர வகுப்பில் பயில்வதற்குத் தகுதிகாணச் சந்தர்ப்பம் வழங்கப்படுமா?

இவை விடை இல்லாத வினாக்களாகவே இப்போது உள்ளன. ஆனால் மாவட்ட மட்டத்தில் இந்தத் தவணை முடிவில் நடத்தப்படும் பரீட்சை வெறும் வகுப்பேற்றத்துக்கு உரியதே அன்றி பொதுப் பரீட்சையாகக் கருதப்படமாட்டாது. வழமையாக வழங்கப்படும் சாதாரணதரச் சான்றிதழுக்கு உள்ள பெறுமதி மாவட்ட பரீட்சைச் சான்றிதழுக்குக் கிடைக்காது.

1987 டிசம்பர் ஜீ. சி. ஈ. பரீட்சைப் பாடத்திட்டங்களுக்கும், 1988 டிசம்பர் ஜீ. சி. ஈ. பரீட்சைப் பாடத்திட்டங்களுக்கும் பெரும் வேறுபாடு உண்டு. அதனைக் கருத்திற் கொண்டு, 1988 டிசம்பரில் நடத்தப்பட இருக்கும் பரீட்சை இரண்டு பாடத்திட்டங்களுக்கும் தனித்தனியாக நடத்தப்படுமா அல்லது புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகத்தான் நடத்தப்படுமா என்பதும் தெளிவுறுத்தப்படாத விடயம்.

எது எப்படியானாலும், என்னவானாலும் 1987 டிசம்பரில் பரீட்சைக்குத் தோற்ற இயலாமற்போன ஆயிரக் கணக்கான தமிழ் மாணவர்களின் கல்வி அடுக்கில் ஒரு வருடம் பாழடிக்கப்பட்டு விட்டது. அவர்களது கல்வி ஒரு வருடத்திற்குப் பின் தள்ளப்பட்டு விட்டது.

அதனால் அவர்களின் வாழ்க்கை முன்னேற்றம் பல வருடங்களுக்குப் பின்னோக்கப் பட்டுவிடும். இத்தனைக்கும் பரீட்சைக்குத் தோற்ற முடியாமற் போனதற்கு அவர்கள் எந்த வகையிலும் காரணர்கள் அல்லர்.

இலங்கை அரசாங்கம் கடந்த இரு தசாப்தங்களாகத் தமிழ் மாணவர்களுக்கு அடுத்துக் கொடுத்து இழைத்துவரும் துரோகப் பட்டியலில் விசேட பரீட்சை நடத்தாமையும் சேர்ந்து விடுகிறது.

இத்தனை ஆயிரம் மாணவரின் கல்வியை, வாழ்க்கையைப் பாதிக்கப் போகும் விடயத்தில், அரசு அக்கறை காட்டி ஒரு விசேட பரீட்சையை நடத்தி இருக்கலாம் அல்லவா? சிங்கள மாணவர்களுக்கு இப்படி ஒரு இழப்பு ஏற்பட அரசு இடம் கொடுக்குமா? தமிழ் மாணவரின் கல்வி நிலையை நலியச் செய்வதற்குத் தருணம் பார்த்திருக்கும் அரசு, ஏதோ ஒரு காரணத்தைக் கூறி இப்படித் தட்டிக் கழிப்பது ஒன்றும் புதிதல்ல.

ஆனால் தமிழ் மாணவரின் கல்வி பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள இந்தியத் தரப்பில் எடுக்கப்பட்ட முயற்சிகளையும், யோசனைகளையும் இலங்கை அரசு வெகு தூரத்தே தூக்கி வீசிவிட்டதே என்பது பெரும் கவலைக்குரியது.

அரசியல் மற்றும் பாதுகாப்புப் போன்ற கடின விடயங்களில் மட்டும் தான் இலங்கை அரசு இந்தியாவைத் துச்சமாக மதிக்கிறது என்பதல்ல. கல்வி போன்ற மென்மையான விடயங்களிலும் தமிழர் நலனைப் பாதுகாக்க இந்தியாவுக்கு, இலங்கை இம்மியும் விட்டுக் கொடுப்பதாக இல்லை என்பதை எவரும் இலகுவில் புரிந்து கொள்ள முடிகிறது அல்லவா?

## நல்லைக் குருமணியின் குருபூசை விழா

யாழ்ப்பாணம், மார்ச் 15

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் குருமஹா சந்நிதானம் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகளது 7ஆம் ஆண்டு குருபூஜை எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி ஸ்வாமிகளது சமாதி ஆலயத்தில் வீற்றிருக்கும் சிவலிங்கப் பெருமானுக்கு விஷேச அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று, பஞ்சமுகார்ச்சனை, திருமுறை அர்ச்சனை என்பன நடைபெறும்.

நண்பகல் 12 மணிக்கு அன்னதானம். மாலை நிகழ்ச்சியாக திரு. வேலாயுதபிள்ளையின் சங்கீத இசைக் கச்சேரியும் நிகழவுள்ளது. (ஒ)

### நாகபாம்புகளை மறைத்து வைத்திருந்தார்

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து வெளி நாட்டு வாசியினுடைய பயணப்பையினுள் ஒளித்து வைக்கப்பட்டிருந்த மூன்று நாகபாம்புகளை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

கொபன்ஹேகனுக்குப் பயணமாவதற்காக இந்த வெளிநாட்டுப் பயணி, கட்டுநாயக்க விமான நிலையம் வந்து சேர்ந்த போது, இச்சம்பவம் இடம்பெற்றது.

பாம்புகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என்று கூறப்பட்ட போது, அவற்றைக் கொல்லப் போவதாக வெளிநாட்டுப் பயணி பயமுறுத்தினார். எப்படியோ அதிகாரிகள் அவரைப் பணிய வைத்து, அவரிடமிருந்த பாம்புகளை அருகில் உள்ள காட்டினுள் உயிருடன் விடுவித்தனர்.

# பஸ் - ரயில் இணைப்புச்சேவை பற்றி அதிருப்தி

யாழ்ப்பாணம் மார்ச் 15

யாழ்ப்பாணம் கொழும்பு பிரயாணிகள் பஸ்-ரயில் இணைப்புச் சேவையால் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

அதிகாலையில் கொழும்பிலிருந்து புறப்படும் 'யாழ்தேவி' பகல் 11 மணிக்கே வவுனியாவை வந்தடைந்து விடுகிறது.

யாழ்நகரில் இருந்து ரயில் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் இணைப்பு பஸ் அனேகமாக 12.30 மணியளவிலே தான் வவுனியாவை வந்தடைகின்றது.

இதனால் கொழும்பிலிருந்து ரயிலில் வந்த பிரயாணிகள் யாழ்ப்பாணம் வருவதற்கு ஒன்றரை மணி நேரம் தாமதிக்க வேண்டியுள்ளது.

அதே சமயம்

வவுனியாவில் ரயிலைப் பிடிக்கச் செல்லும் பிரயாணிகளும் பஸ் தாமதம் அடையும் போது ரயிலைவிட்டு வவுனியாவிலேயே தங்க வேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது. [இ-51]

### மாணவர் அமைப்பு ஆதரவு

யாழ்ப்பாணம், மார்ச் 15

பொது மன்னிப்பு, யுத்த நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தை என்பனவற்றை முன்வைத்து யாழ் அன்னையர் முன்னணியினர் மேற்கொண்டுள்ள போராட்டத்திற்கு தேசியமாணவர் நலன் காக்கும் அமைப்பு தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது. (ஒ-9)

## ★செய்திக் கொத்து★

### சாரணர்சங்க வருடாந்தக்கூட்டம்

வட்டுக்கோட்டை, மார்ச் 15

காங்கேசன்துறை மாவட்ட சாரணர்கிளைச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் மாவட்ட ஆணையாளர் திரு. என். போஜன் தலைமையில் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும்.

வடபிரதேசக் கல்விப் பணிப்பாளர் ஜனாப்.எம். எம் மன்சூர் பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாணம் பேலதிக அரசாங்க அதிபர் திரு கே இராமநாதர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர். (அ-161)

### ரம்புக்கனைத் தொகுதிக்கு....

கொழும்பு, மார்ச் 15

திரு. அசோகா கருணாரத்தின காலமானதை அடுத்து காலியான ரம்புக்கனை நாடாளுமன்றத் தொகுதிக்கு ஒருவரை எம்பியாக நியமிக்குப்படி தேர்தல் ஆணையாளர் ஐ. தே. க. தலைமைப் பீடத்தைக் கேட்டிருக்கிறார். (ஒ-எ)

### தீர்மானம்

சாவகச்சேரி, மார்ச் 15

தென்மராட்சிப் பாடசாலைகளின் அதிபர்கள் சங்கம் கடந்த டிசம்பர் மாதம் நடைபெறாத ஜீ. சி. ஈ. சாதாரணதரப்பரீட்சையைப் பின்போடப்பட்ட புலமைப் பரிசில் பரீட்சையையும் விரைவில் நடத்தும்படி தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

சங்கத் தலைவர் திரு. எஸ் குகதாசன் தலைமையில் டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைத் தேசிய பாடசாலையாகக் குறிப்பிடி கல்வியமைச்சரைக் கோரும் பிறிதோர் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (இ 31)

# பெற்றோர் இல்லாத தங்கையின் பணம், நகை மோசடியாம்

## அண்ணன், அண்ணி பிணையில்

கொழும்பு, மார்ச் 15

பெற்றோர் இல்லாத தங்கையின் பணம் தங்க நகைகளை மோசடி செய்தது என்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பு மோசடி தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட சகோதரனும், மனைவியும் தலா 5,000 ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் வாசியும் பாமன் கடையில் வசிப்பவருமான தங்கை செய்த முறைப்பாடு காரணமாக சுதுமலைவாசிகளான அவரது சகோதரரும் மனைவியும் மோசடி தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பாக தங்கை தனது முறைப்பாட்டில் தெரிவித்ததாவது:-

பெற்றோரை இழந்த நான் கடந்த சிலமாதங்களாக பாமன் கடையிலுள்ள சகோதரன் வீட்டில் வசித்து வருகின்றேன்.

எனக்குச் சொந்தமான 2 லட்சத்து 19 ஆயிரம் ரூபா ரொக்கத்தையும் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

தற்போது தாமுடியாதென நம்பிக்கைமோசடி செய்து விட்டார்கள். இப்படி முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சகோதரியின் முறைப்பாட்டை அடுத்து அவரது சகோதரனும், மனைவியும் கொழும்பு மோசடி தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு கல்கிசை நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எரிக் பொன்சேகா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிமன்றத்தில் வைத்து நீதிபதி முன்னிலையில் தங்க நகைகள் சகோதரியிடம் கையளிக்கப்பட்டன. ஆனால் பணம் கையளிக்கப்படவில்லை.

இதனை அடுத்து பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி மீண்டும் இம்மாதம் 25ஆம் திகதி ஆஜராகுமாறு உத்தரவிட்டார். (இ-21)

# விழிப் புலன் இழந்தோர் திறமைகள் வெளிவர வேண்டும்

## கைக்கடிகார அன்பளிப்பு வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம் மார்ச் 15

விழிப்புலனற்றோர் தமது பெற்றோருக்கும் சமுதாயத்துக்கும் பாரமானவர்கள் என்ற நிலை மாறிவிட்டது. எனவே மறைந்திருக்கும் அவர்களது திறமைகள் வெளிக் கொணரப்பட நாம் வழிகாட்ட வேண்டும்.

மனித உரிமைச் சேவை அமைப்பு நிதியத்தினரால், விழிப்புலனற்றோருக்கான கைக்கடிகாரங்களை வழங்கும் விழா அண்மையில் யாழ் பல்கலைக்கழக பொதுஅறையில் நடைபெற்றது.

பிரஸ்தாப நிதியத்தைச் சேர்ந்த திரு. பி. விக்னேஸ்வரன் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விழாவில் யாழ். விழிப்புலன் இழந்தோர் சங்க உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் கலந்து கொண்டனர்.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி சந்திரா பத்மபாலன் உரையாற்றுகையில் விழிப்புலனற்றோர் ஆரம்பக் கல்வி கற்க மட்டுமே விழிப்புலனற்றோர் பாடசாலைகளில் வசதி உண்டு. அதன்பின் அவர்கள் கல்வியைத் தொடர கனிஷ்ட பாடசாலை ஒன்று வடபகுதியில் வேண்டும் என்றார்.

தென் இலங்கையில் விழிப்புலனற்றோர் பலர் பட்டதாரிகளாக இருக்கிறார்கள். அதேபோல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும் இத்துறையில் பட்டதாரிகளைப் பயிற்றுவிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

விழாவில் மனித உரிமைச் சேவை அமைப்பு நிதியத்தைச் சேர்ந்த திரு ராஜேந்திரம், திரு உருத்திரலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இறுதியில் யாழ் விழிப்புலனற்றோர் சங்கச் செயலாளர் திரு. ரவீந்திரன் நன்றி தெரிவித்தார். (இ-9)

### இந்து இளைஞர் மன்றம் மகஜர்

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடத்தப்படாத ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையை ஏப்ரல் மாதத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கும்படி சரசாலை இந்து இளைஞர்மன்றம் கல்வி அமைச்சர் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் ஆகியோருக்கு மகஜரை அனுப்பி வைத்துள்ளது. (இ-31)

### பண்ணைவீதி திருத்தப்படுகிறது

வேலணை, மார்ச் 15

நீண்டகாலமாகசெப்பனிடப்படாமல் இருந்து வந்த யாழ். பண்ணைவீதி தற்பொழுது செப்பனிடப்பட்டு வருகின்றது (இ1-67)



**பொய்யாமொழி**

**குறள்:**
குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து மாண்ட உஞற்றி லவர்க்கு.

**பொருள்:**
சோம்பலில் அகப்பட்டுச் சிறந்த முயற்சி இல்லாதவராய் வாழ்கின்றவர்க்குக் குடியின் பெருமை அழிந்து குற்றம் பெருகும்.

# தாய்மார், சிறுர்களுக்கு சத்துணவு வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 15

இருபாலை அன்னை இந்திரா சனசமூக நிலையத்தில் றெட்பானா உதவியுடன் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் இக்கிராமத்தில் உள்ள கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார், ஐந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுர்கள் ஆகியோருக்கு தினமும் சத்துணவாக நெஸ்பிறே பால்மா, பாணு, இலைக் கஞ்சி மற்றும் போஷாக்குள்ள உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அன்னை இந்திரா சனசமூக நிலைய சத்துணவுப் பொறுப்பாளராக செல்வி சு. நிர்மலாவும் உதவியாளர்களாக செல்வி சி சுதாமதி செல்வி இ சந்திரமலர் ஆகியோர்கடமையாற்றுகின்றனர்

தினமும் அறுபதுக்கு மேற்பட்ட தாய்மார் இதனால் பயன் அடைந்து வருகின்றனர் (ஒ-10)

### பயிற்சி நிலையம்

அறவழிப் போராட்டக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட அறவழிப் பயிற்சி நிலையம் இம்மாதம் 19ஆம் திகதி திறந்து வைக்கப்படவிருக்கிறது. பண்டிதர் திரு செ சிவலிங்கம் இதனைத் திறந்து வைப்பார். (இ-31)

### அமெரிக்கா நிராகரிப்பு!

வாஷிங்டன், மார்ச் 14

கிளர்ச்சியாளர்களுக்கான அமெரிக்க ஆயுத உதவி நிறுத்தப்பட்ட பின்னரும் ஆப்கன் அரசுக்கு சோவியத் ஆயுத உதவி தொடர்ந்து வழங்கப்படும் என்ற நிலைப்பாட்டை அமெரிக்க அரசு நிராகரித்து விட்டது.

சோவியத் அரசு இந்த நிலைப்பாட்டை ஐ நா. மேற்பார்வையிலான பேச்சுக்களின் போது தெரிவித்திருந்தது (எ)

## பக்தாக்-தெஹ்ரான் மீது

# வளைகுடாவில் ஏவுகணைத் தாக்குதல் மீண்டும் ஆரம்பம்!

தெஹ்ரான், மார்ச் 14

இரண்டு நாள் இடைவெளியின் பின்னர் ஏவுகணைத் தாக்குதலை ஈரானும் ஈராக்கும் கடந்த ஞாயிறு இரவு மீண்டும் ஆரம்பித்தன.

இரண்டு வாரங்களாக நடத்தப்பட்ட இந்த ஏவுகணைத் தாக்குதல் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நிறுத்தப்பட்டிருந்தன

தெஹ்ரான் மீது ஈராக் முதலாவது ஏவுகணையை ஞாயிறு இரவு ஏவியது அதைத் தொடர்ந்து பல ஏவுகணைகள் தெஹ்ரான் மீது ஏவப்பட்டன என்று ஈரான் அரசு அறிவித்தது

இதில் 16 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்.

நீண்ட தூரம் பாயும் ஏவுகணைகள் ஏவப்பட்டதற்குக் காரணம், கரையோர நகரம் ஒன்றின் மீது ஈரானிய படைகள் ஷெல் தாக்குதலை நடத்தியதே என்று ஈராக் அரசு அறிவித்தது

ஷெல் தாக்குதலில் 20 ஈராக்கிய பிரஜைகள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

# ராஜீவைப் பதவி விலகக் கோரி இந்தியாவில் பொதுவேலைநிறுத்தம்

புதுடில்லி, மார்ச் 14

பிரதமர் ராஜீவ்காந்தியைப் பதவி விலகக் கோரி எதிர்க்கட்சிகள் ஒழுங்கு செய்த பொது வேலை நிறுத்தம் இன்று (செவ்வாய்)நடைபெறுகின்றது.

பொது வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் முயற்சியில் இந்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது.

பாதுகாப்புப் படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதனிடையில் அரசு சார்பு இயக்கங்கள் சேர சக்திகள் பொது வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ள வேண்டாம் என்று மக்களைக் கேட்டுள்ளன.

பிரதமர் ராஜீவ்காந்தி 1984 டிசம்பர் தேர்தல் மூலம் பதவிக்கு வந்தார். அவரின் பதவிக் காலம் 1989 டிசம்பரில் முடிவுற வேண்டும்.

### வன்செயல்கள்

ஆந்திர மாநிலத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இடம் பெற்ற வன்செயல்களில் இதுவரை பதினொரு பேர் உயிரிழந்தனர். (எ)

### றேகனின் மாஸ்கோ விஜயம்

ஆயுத பரிகரணம் பற்றிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முடியாவிட்டாலும், மாஸ்கோவுக்கு விரைவில் விஜயம் செய்யப்போவதாக அமெரிக்க அதிபர் ரொனால்ட் றேகன் தெரிவித்தார். (எ)

# காஸா மீது பொருளாதாரத்தடை

## இஸ்ரவேல அரசு அறிவிப்பு

டெல்அவிவ், மார்ச் 14

கைப்பற்றப்பட்ட பலஸ்தீனப் பிரதேசங்களான காஸா, மேற்குக் கரை பகுதிக் கிராமங்கள் மீது பொருளாதாரத் தடைகளை இஸ்ரவேல் அரசு விதித்திருக்கின்றது

இப்பிரதேசங்களில் வாழும் பலஸ்தீனியர்கள் நடத்தும் கிளர்ச்சியை அடக்கவே இஸ்ரவேல் அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கின்றது

முதலில் அப்பகுதிகளுக்கு எரிபொருளை அனுப்புவதற்குத் தடை விதிக்கப்பட்டது. (எ)

### இந்திய அரசின் வேண்டுகோள்

ஆப்கான் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வாய்ப்பு அதிகரித்து வருவதால் பகிஸ்தானுக்கு வழங்கும் ஆயுத உதவியை அமெரிக்கா குறைக்க வேண்டும்

இப்படி இந்திய அரசு அமெரிக்காவைக் கேட்டுள்ளது

இத் தகவலை இணை அமைச்சர் நட்வர்சிங் இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

புதுடில்லிக்கு விஜயம் செய்த அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் மைக்கல் ஆமகோஸ்ட்டிடம் இதுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் திரு நட்வர்சிங் தெரிவித்தார் (எ)

## வெளி உலகில்

### இரண்டாயிரம் பலஸ்தீனியர் கைது!

டெல் அவிவ். மார்ச்14

இஸ்ரவேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் நடக்கப்படும் கிளர்ச்சி தொடர்பாக சுமார் 2 ஆயிரம் பலஸ்தீனியர்களை இஸ்ரவேல் பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர். (எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Specialist in Wedding, Birthday parties ect, ect in BLACK and WHITE and in CO OUR. Visit to:-
**N. Satgunalingan**
Photographer
Second Lane,
(Adjoining Sub Post Office)
Power House Road,
Jaffna. T' Phone: 23375
Branch: Pulora, Chunnakam.

# உதயன்

15 - 03 - 1988 செவ்வாய்க்கிழமை

திருமணம், பிறந்த நாள் போன்ற வைபவங்களைக் கலரிலும் கறுப்பு வெள்ளையிலும் படம் பிடித்துக் கொடுக்கவும் கலர் ஃபிலிம் கழுவிக் கொடுக்கவும் நாடுங்கள்:-
**நா. சற்குணலிங்கன்**
புகைப் படப்பிடிப்பாளர்
9, இரண்டாம் ஒழுங்கை,
(உப தபாற்கந்தோருக்கு அருகில்)
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23375
கிளை:- புளோரா, சுன்னாகம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

**அமரர் நாகலிங்கம் மகாலிங்கம்**

மலர்வு:- 26-12-1938
உதிர்வு:- 15-02-1988

இவர் குரும்பசிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும், முல்லைத்தீவு அரசாங்க வைத்தியசாலை அப்போதிக்கரியும் ஆவார். 16 3. 1988 புதன்கிழமை கொக்குவில் இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் அந்தியேட்டி கிரியைகளில் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பிரிவால் துயருறும்:
தாய், மனைவி, பிள்ளைகள்,
மைத்துனர்கள் சகோதரிகள்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில். (2038)

## பயிற்சியை . . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
தூதுக்குழுவிடம் உறுதியளித்துள்ளார்.

பிரஸ்தாப மாணவர்களை மீண்டும் கலாசாலைக்கு அழைத்து ஒரு மாத காலம் துரித வகுப்புக்கள் நடத்தியே இப்பரீட்சை நடத்தப்படும்.

இதுசம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி தாம் ஆசிரிய கலாசாலை கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வருடம் பலாலி கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் அனுமதிக்கப்பட்ட சகல ஆசிரிய மாணவர்களினதும் கல்விச் சான்றிதழ் மூலப் பிரதிகள், பிறப்புச் சான்றிதழ் மூலப் பிரதிகள், பிறப்புச் சான்றிதழ் மூலப்பிரதிகள் போன்ற முக்கியமான தஸ்தாவேஜுகள் மாயமாக மறைந்துவிட்டன.

அமைச்சுக்கு வெளியே மறைந்திருக்கும் இத்தஸ்தாவேஜுகளை மீண்டும் பெற்று உரியமுறைப்படி பலாலி, கோப்பாய் அதிபர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற சங்கத்தின் கோரிக்கை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சின் செயலாளர் சங்கத் தூதுக்குழு விடம் உறுதியளித்தார். (ஓ)

## பிறந்த நாள் வாழ்த்து



**செல்வி ஸ்ரீதரன் நிதர்சினி**

யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த ஸ்ரீதரன் கமலகுமாரி தம்பதியினரின் செல்வப்புதல்வி நிதர்சினி தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (15 3. 88) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை பிரான்ஸில் இருக்கும் அன்பு அப்பா, அம்மா, மாமாமார், மேற்கு ஜேர்மனியில் இருக்கும் சித்தப்பாமார், யாழ்ப்பாணத்தில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, அத்தைமார், பெரியம்மா, சித்திமார், மாமா, அண்ணா, பாட்டி மற்றும் அப்பப்பாமாரும் அம்மம்மாமாரும் நல்லூர்க் கந்தன் அருளால் பல்கலையும் கற்று நலமுடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (1956)

## தேவை
### வெல்டிங் தகர வேலைகளுக்கு
### ஆட்கள் தேவை

எமது சில்வர் உற்பத்தித் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு காஸ் வெல்டர் (Gas Welder), ரிங்கர் (Tinker) ஆட்கள் தேவை.

**சபா இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்**
No: 5, 6, இன்டஸ்ரியல் எஸ்ரேட், அச்சுவேலி.

## கால அவகாசம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
தனை அடுத்து தாம் கல்வித் திணைக்களம், பரீட்சைத் திணைக்களம் கல்வி அமைச்சு, இந்திய அமைதிப்படை ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு வற்புறுத்தி வந்ததாகவும்-

அவற்றை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை கல்வி அமைச்சினால் இந்திய தூதருக்கு அளிக்கப்பட்ட பதில் இந்திய அமைதிப்படை மூலம் தமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்- அவர் தெரிவித்தார்

அதன்படி இந்தப் பரீட்சையை நடாத்துவதற்கு வினாத்தாள் தயாரிப்பு, மொழி பெயர்ப்பு அச்சிடுதல் போன்றவற்றை ஏப்ரல் மாதத்திற்கு முன்னதாகச் செய்ய முடியாதென்றும் இந்த நடவடிக்கைகளுக்குக் குறைந்தது மூன்றுமாத கால அவகாசம் தேவை என்றும் எனவே இப் பரீட்சை டிசம்பரிலேயே வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தடைப்பட்ட ஜீ. சீ. ஈ பரீட்சைக்குப் பதிலாகப் பரீட்சைத் திணைக்களத்தினால் தனிப் பரீட்சை நடத்தப்படுவது சாத்தியம் இல்லை என்று 16-2-88 ஆம் திகதிய உதயனில் செய்தி வெளியாகி இருந்தது தெரிந்ததே. (அ-9)

## மாற்று .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
சினாலும் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் ஜீ. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சை அன்றி வேறெந்த மாற்றுத் திட்டத்தையும் ஏற்கவில்லை

★ இப்படி விசேட பரீட்சை நடத்துவது எதுவும் புதிதல்ல: முதல் முறையுமல்ல. 1984 டிசம்பரில் நடைபெறுக பரீட்சை 1985 ஏப்ரலில் நடத்தப்பட்டது. அதே போல் இம்முறையும் நடத்தவேண்டும்.

★ இத்துடன் இப்பரீட்சையை நடத்த மூன்று மாதகால அவகாசம் தேவை எனக் கூறப்படுகிறது. எனவே இக்கால அவகாசத்தில் பரீட்சைக்கான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு ஜூன் மாதத்திலாவது பரீட்சையை நடத்த வேண்டும். டிசம்பரில் அல்ல

★ இதுபற்றி பிரசைகள் குழு, அன்னையர் முன்னணி, ஆசிரியர் சங்கங்கள் ஆகியவற்றின் வேண்டுகோள்கள் செவிசாய்க்கப்பட வேண்டும். (அ-9)

## செ.ஜோ. ஜோன்ஸ் விளாசுகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 15
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கெதிரான கிரிக்கெட் போட்டியில் சென் ஜோன்ஸ் அணி தனது நிலையை ஸ்திரப்படுத்தி உள்ளது

நேற்று நடைபெற்ற முதல்நாள் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 108 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

தொடர்ந்து ஆடிய சென் ஜோன்ஸ் அணி நேற்று ஆட்டம் நிறுத்தப்பட்டபோது 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றிருந்தது

இன்றைய ஆட்டம் பகல் 12. 15 மணிக்கு ஆரம்பமாகும். (ஓ-7)

## விஜேவீர . . .

[1ம் பக்கத் தொடர்ச்சி]
ரோஹன விஜேவீராவே உத்தரவிட்டார் என்றும் இது ஜே.வி.பியின் மூன்னொரு பிரமுகரான உபதிஸ்ஸகமனாயக்க வுக்குப் பிடிக்கவில்லை என்றும் புலனாய்வு அறிக்கைகள் தெரிவிகின்றன. (ஓ-எ)

## இவருக்குத் தடை!

கொழும்பு, மார்ச் 15
சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவரும் 'சர்வதேசவிழிப்பு' இயக்கத்தின் தற்போதைய பொதுச் செயலாளருமான திரு. மார்ட்டின் எனல்ஸ் என்பவரை நாட்டினுள் பிரவேசிக்கக் கூடாது என்று இலங்கை அரசு தடைவிதித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு இவர் விமானம் ஒன்றில் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்திறங்கினார். (ஓ-எ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**உயர்திரு. நாகமுத்து செல்லையா**
(பிரதம இளைப்பாறிய தபால் அதிபர், மானிப்பாய் அவர்களின் அன்பு மனைவி)

**திருமதி. நாகேஸ்வரி செல்லையா**

அன்னையே! எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே, எங்களைக் கண்ணின் இமைபோல் காத்தருளிய எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இன்றோடு ஓர் ஆண்டாகி விட்டது. ஓர் ஆண்டென்ன ஒரு கோடி ஆண்டாயினும் உங்கள் நினைவும் நீங்கள் ஏற்றி வைத்த ஒளித் தீபமும் எங்கள் இதயத்தினின்றும் ஒருபோதும் நீங்க மாட்டாது ஆசை அம்மா, அழகே உருவான எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் உடல் தான் அழிந்ததம்மா, உங்கள் புகழுடல் என்றுமே மறையாதம்மா உள்ளத்தில நாம் போற்றும் கோயில் ஒன்று உண்டென்று சொல்லின் அது நீங்களன்றி வேறில்லை அம்மா. எங்கள் இதயத்தில நீங்கள் நித்திய நினைவாகவிளங்கும் அகல்விளக்காய் இருப்பீர்கள் அம்மா ஈடு இணையற்ற எங்கள் செல்வமே எம்மைப் பெற்றெடுத்த எங்கள் அன்புத் தாயே!

கோடி கொடுப்பினும் உங்களைப் போல் அன்பு அம்மாவைக் காணவும் முடியுமோ? அம்மா என்று அழைத்தால் அன்போடு அரவணைப்பீர்களே. இனியார் எமக்கு ஆறுதல் சொல்வார் இனி எப்பிறப்பில் உங்களைக் காண்போம் ஆசை அம்மா, உங்கள் இனிய முகமும் தேன் சிந்தும் சொற்களும் எம் இதயத்தில் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது உங்கள் தாயாகவும், மாமியாகவும், பேத்தியாகவும் அடைந்ததும் பெருந்தவம் செய்தோம், பெருமை பெற்றோம் நீங்கள் தெய்வமாக இருந்து எங்களை வழிகாட்டி நடத்திக் காத்தருளுமாறு இறைஞ்சிக் கேட்டு உங்கள் அன்பான பொற்பாதத்தில் எங்கள் அன்பு மலர்களை வைத்து வணங்கி எல்லாம் வல்ல இறைவனை உங்கள் ஆத்மா சாந்தி அடையும் வண்ணம் பிரார்த்திக்கும்.

உங்கள் அன்புப் பிள்ளைகள், மருமகள்,
பேரப்பிள்ளைகள். (1905)

## நீத்தார் பட்டியல்

**செல்வி இளையதம்பி இராசம்மா**

நவாலியைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை செல்வி இளையதம்பி இராசம்மா 14-3-88இல் காலமானார். இவர் இளையதம்பி கனகசபையின் சகோதரியும், சில்வஸ்ரர் பாலசுப்பிரமணியத்தின் (இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்) பெரியதாயுமாவார். இறுதிக் கிரியைகள் 16-3-88 காலை 10 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(2052) இ. கனகசபை

**தம்பையா கோபாலபிள்ளை**

ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய அதிபர் தம்பையா கோபாலபிள்ளை வட்டக்கச்சியில் காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னம்மா கோபாலபிள்ளை (ஆசிரியை, வட்டக்கச்சி மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், பவானி [ஜேர்மனி], மாலினி (A. M. P. Student யாழ் வளாகம்) நந்தினி ஆகியோரின் அன்புத் தகப்பனும், கணேசானந்தன் Attorney At Law - (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மாமனும் செல்வன் உஷாநந்தனின் பேரனும் சுப்பிரமணியம், காலஞ்சென்ற மீனாட்சிப்பிள்ளை, விசாலாட்சி, நீலாட்சி, காலஞ்சென்ற பாக்கியம், பசுபதி, ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவஞானபூரணம், சின்னத்தங்கம், சிவகாமிப்பிள்ளை, தவரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (15 03 1988) காலை 10 மணியளவில் குடும்ப மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர் மற்றும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: திருமதி பொன்னம்மா கோபாலபிள்ளை. [2049]

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

15-03-1988



பிறப்பு: 05. 01. 1905
இறப்பு: 17. 12. 1987

**S. A. ராசையா**

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய் வாழ்ந்து எங்கள் அனைவரையும் ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி இறைபதம் அடைந்தீர்கள் உங்கள் நினைவுச்சுடர் எங்கள் இதயங்களில் என்றும் அணையாத தீபமாக பிரகாசித்துக் கொண்டிருக்கும் தங்கள் ஆத்மா சாந்தியுடன் இறையடியில் இருக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் அன்பு
மகள், மகன், சகோதரி,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,

கிழக்கு வீதி,
ஊர்காவற்றுறை. (1915)

## 31-ஆம் நாள் நினைவஞ்சலி

**திருமதி மகேஸ்வரி செந்திநாதன்**

தோற்றம்: 01-05-1934
மறைவு: (மலேசியாவில்) 14-02-1988

அன்பின் பிறப்பிடமாய் அறிவின் உறைவிடமாய், பண்பின் உருப்பிடமாய் வாழ்ந்த எங்கள் அன்புத்தாயே! தாய் என்ற ஸ்தானத்தில் இருந்து சொல்லில் எழுத முடியாத அளவிற்கு எங்களுக்குத் தொண்டாற்றினீர்கள் உங்களைப் போலவரைத் தாயாக அடையப் பெற்றது நம் முன்னோர் செய்த தவப்பயனே. நாம் ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் உம்மைப் போல் தாயைப் பெறுவோமா? உங்கள் அன்பு எங்கள் நெஞ்சை விட்டு நீங்காது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
கணவன், மக்கள், மருமகன்,
சகோதரர்கள்.

R. SENTHINATHAN,
Production Engineer,
Cement Industries of Malaysia Berhad,
Perlis, Malaysia
(1943)

## மூன்றாம் வருட நினைவு அஞ்சலி



**திருமதி சக்திவடிவேல தவமணி**

தோற்றம்: 17-04-1956
மறைவு: 17-03-1985

திதி: 15-03-1988

பறந்து சென்ற காலம் பல — நீ
பிரிந்து சென்று நாட்கள் பல
நாம் கலங்கி நின்றோம் நாளும் இங்கே
தினம் நினைத்திருப்போம் நாளும் உமை
உமது ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்

கணவன்,
பிள்ளைகள் (உஷாலகுளி மதுசூதன்),
கோணாவளை, பெற்றோர், மாமி, உறவினர்.
வயாவிளான்.

DAY CLASS
PAPER CLASS
புதன், வெள்ளி
8-30 — CHEMISTRY — மக்லி
9-30 — PHYSICS — சத்தியசீலன்
10-30 — BOTANY — செல்வநேசன்
ஆரம்பம்: 16 - 03 - 88
New Master Institute
B. M. C. Lane,
JAFFNA.

கிறிஸ்துவுக்காக இளைஞர் சங்கம்
யாழ்ப்பாணம்
வழங்கும்
"பெற்றோர் நிகழ்ச்சி"
18-03-1988
வெள்ளிக்கிழமை
மாலை 3.30 முதல் 5.30 வரை
Fig மண்டபத்தில்
நடைபெறும்.
(பரியோவான் ஆலய மண்டபம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 15-03-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Tuesday, 15th March 1988.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org